தமிழ்நாடு அரசு

# தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,

சென்னை - 600 025.

**விளம்பர அறிவிக்கை எண்.14665/ஐ-3/2025** **நாள் : 02.05.2025**

## அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி சேர்க்கை - 2025
## 2025 - 26-ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாமாண்டு பட்டயப்படிப்பு மாணாக்கர்கள் சேர்க்கை
## (தமிழ்நாடு மாணாக்கர்களுக்கு மட்டும்)

தமிழ்நாடு அரசின் அனைத்து பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான **முதலாமாண்டு மற்றும் பகுதி நேரப் பட்டயப்படிப்பிற்கு** விண்ணப்பிக்கவும், சான்றிதழ்களைப் பதிவேற்றம் செய்யவும் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**விண்ணப்பிக்கும் முறை : https://www.tnpoly.in** என்ற இணையதள வாயிலாக விண்ணப்பங்கள் பதிவுசெய்ய வேண்டும். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணாக்கர்கள் மாவட்ட சேவை மையங்கள் **(TNEA Facilitation Centre)** மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இம்மையங்களின் பட்டியல் மேற்குறித்த இணையதள முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

**கல்வித் தகுதி :**

1. **முதலாமாண்டு பட்டயச் சேர்க்கை : (1st Year Diploma Course)**

பத்தாம் வகுப்பு (SSLC / Matriculation) தேர்ச்சி (அல்லது) அதற்கு இணையான கல்வித் தகுதியில் தேர்ச்சி.

2. **பகுதிநேர பட்டயச் சேர்க்கை : (Part -Time Diploma Course)**

**தகுதி :** 10th / 10th +(2 years ITI) / 10th + (2 years Experience) படிப்பிற்கான கால அளவு - 4 வருடங்கள்.

**பதிவுக்கட்டணம் :** பதிவுக் கட்டணமான **ரூ.150/-** ஐ விண்ணப்பதாரர் Debit Card / Credit Card / Net Banking இணையதள வாயிலாக செலுத்தலாம்.

SC/ST பிரிவினர் பதிவுக் கட்டணம் செலுத்த அவசியமில்லை.

| | |
|---|---|
| முதலாமாண்டு, பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள் | **07.05.2025** |
| முதலாமாண்டு, பகுதிநேர பட்டயப் படிப்பிற்கான இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்ய இறுதி நாள் | **23.05.2025** |

10-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ், சாதிச்சான்றிதழ், சிறப்பு பிரிவினர் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் புகைப்படம் ஆகியவை தேவையான அளவுகளில் இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

அனைத்து தகவல்கள், வழிகாட்டி மற்றும் தொலைபேசி எண்கள் மாணாக்கர்கள் **https://www.tnpoly.in** என்ற இணையதளம் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

**ஆணையர்,**
**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,**
**சென்னை - 600 025.**

செ.ம.தொ.இ./ 447 /வரைகலை/2025